"இனிமையான குழந்தைகளே! இப்போது நீங்கள் தந்தை, ஆசிரியர், சத்குரு - மூவர் முன்பும் அமர்ந்திருக்கிறீர்கள். தந்தை, ஆசிரியர் ஆகி உங்களுக்குப் படிப்பு சொல்லித் தருகிறார், சத்குரு ஆகி உடன் அழைத்துச் செல்கிறார் - இதுவே அவரது கிருபையாகும்.

கேள்வி: குழந்தைகளாகிய நீங்கள் பாபாவிடம் தந்துள்ள உறுதிமொழி என்ன? உங்கள் கடமை என்ன?

பதில்: பாபாவிடம் கொடுத்துள்ள உறுதிமொழி - பாபா, நாங்கள் உங்களிடமிருந்து என்னென்ன கேட்டிருக்கிறோமோ அதையெல்லாம் மற்றவர்களுக்கும் அவசியம் சொல்வோம். எங்களைப் போலவே மற்றவர்களை ஆக்குவோம். எங்களது கடமை - பாபாவுக்குச் சமமாக அனைவருக் கும் கற்றுத் தருவது, ஏனெனில் இப்போது புத்தியின் பூட்டு திறந்து கொண்டுள்ளது. எப்படி நாங்கள் ஆஸ்தி பெற்றுக் கொண்டிருக்கிறோமோ அதுபோல் இரக்கமனம் உள்ளவராகி மற்றவர்களுக்கும் ஆஸ்தி கிடைக்கச் செய்ய வேண்டும்.

பாடல்: தாய்-தந்தையிடமிருந்து ஆசீர்வாதங்கள் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஓம் சாந்தி. இப்போது குழந்தைகள் தாய்-தந்தையின் முன்பு அமர்ந்துள்ளார்கள். அதாவது குழந்தைகள் பாடசாலையில் ஆசிரியருக்கு அருகில் அமர்ந்துள்ளனர். குழந்தைகள் அறிவார் கள், நாம் சத்குருவுக்கு அருகிலும் அமர்ந்துள்ளோம், ஞானம் கேட்பதற்காக. யாரிடம் கேட்பதற்கு? ஞானக்கடலாக உள்ளவர் பாபா மட்டுமே. அவர் பரந்தாமத்திலிருந்து வந்துள்ளார், நமக்குக் கல்வி புகட்டுவதற்காக. உங்களது புத்தி பரந்தாமம் என்ற இனிய வீட்டின் மீது ஈடுபட்டுள்ளது. கற்றுத் தருவது இங்கே தான், தாய்-தந்தை முன்னால் அமர்ந்துள்ளனர் என்றாலும் புத்தியோகம் அல்லது நினைவு நிர்வாண்தாம் பக்கம் உள்ளது. நாம் தந்தையுடன் கூடவே வீட்டுக்குச் செல்ல வேண்டும். பிறகு விஷ்ணுவின் வீட்டிற்கு வருவோம். அதுவும் வீடு, இதுவும் வீடு தான். முதலிலோ நம்மைத் தகுதியுள்ளவர்களாக ஆக்குகின்றவர் யாரோ அவரை நினைவு செய்ய வேண்டும். தாய்-தந்தையர் கன்யாவைத் தகுதியுள்ளவராக ஆக்கு கின்றனர் இல்லையா? மாமனார் வீட்டுக்குச் செல்லும்போது தாய்-தந்தை எப்படிப் பட்டவர்கள் என்பதை எடுத்துக் காட்டுவாள் - இந்தக் குழந்தை நல்ல அதிர்ஷ்டசாலிப் பெண் என்று பார்ப்பவர்கள் சொல்வார்கள். இப்போது நீங்கள் அறிவீர்கள், நாம் பரமபிதா பரமாத்மாவுக்கு முன்பு அமர்ந்துள்ளோம், படித்துக் கொண்டிருக்கிறோம். பாபா குழந்தைகளுக்காக மிகுந்த முயற்சி செய்கின்றார். இதுவே அவரது கிருபை யாகும். குழந்தை வக்கீலாகி விட்டால் தாய்-தந்தை நல்ல முறையில் வளர்த்திருக்கிறார்கள், படிக்க வைத்திருக் கிறார்கள் என்று சொல்வார்கள். தாய்-தந்தையர் படைப்பவர்களாகவும் உள்ளனர், இயக்குபவர்களாகவும் உள்ளனர். ஆண் குழந்தைகளுக்கு மோகம் தந்தை மீது செல்கின்றது. ஏனெனில் அவர்களுக்குத் தந்தையிடமிருந்து ஆஸ்தி கிடைக்கின்றது. குமாரியோ போய் தாயாகின்றாள். இப்போது இங்கே நீங்கள் பிராமணகுல பூஷணர்களாக இருக்கிறீர்கள். பிராமணர்களின் மகிமை பாடப்படு கின்றது. பிரஜாபிதா பிரம்மாவின் குழந்தைகளோ அநேகம் பேர் உள்ளனர். அந்த பிராமணர் களிடமும் நீங்கள் கேட்க முடியும். நீங்கள் முகவம்சாவளி என்றால் பிரம்மாவின் (முகக்) வாய்வழி குழந்தைகளா நீங்கள்? சரீர சம்பந்தமான (குக

வம்சாவளி) குழந்தைகள் என்றால் லௌகீகத் தாய் தந்தையரிடம் பிறவி எடுக்கின்றனர். பிரம்மா வாயிலிருந்து நீங்கள் எப்போது பிறந்தீர்கள்? அவர்களால் பதில் சொல்ல முடியாது. நீங்கள் நடைமுறையில் அறிந்திருக்கிறீர்கள் -- நாம் பிரம்மாவின் கமல வாயின் மூலம் தத்தெடுக்கப் பட்டுள்ளோம். சிவபாபா தத்தெடுத்துள்ளார். இங்கே நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள், நாம் தந்தை-ஆசிரியர்-குரு மூவரின் முன்பும் அமர்ந்துள்ளோம். தந்தையோ மேனர்ஸ் (நன்னடத்தை) கற்றுத் தருகின்றார் - ஸ்ரீகிருஷ்ணரைப் போல் குணவான், சர்வகுண சம்பன்ன நிலையை இங்கேயே தான் புருஷார்த்தம் செய்து ஆக வேண்டும், மனிதர்களோ இதை அறிந்திருக்கவில்லை. அதாவது இராதை-கிருஷ்ணர் முந்தைய ஜென்மத்தில் யாராக இருந்தார்கள்? இதைக் குழந்தைகளாகிய நீங்கள் மட்டுமே அறிவீர்கள். யார் பூஜைக்குரியவர்களாக இருந்தார்களோ அவர்களே பூஜாரி ஆனார்கள், மீண்டும் பூஜைக்குரியவர்களாக ஆகிறார்கள். பக்தர்கள் பூஜாரி எனப்படுகிறார்கள். நரனிலிருந்து நாராயணனாக அல்லது ஆண்டியி-ருந்து (பிச்சைக்காரன்) அரசனாக (இளவரசன்) ஆக்குவதற்கான ஆஸ்தியை பாபாவைத் தவிர வேறு யாரும் தர இயலாது. நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று யாராவது உங்களிடம் கேட்டால் சொல்லுங்கள் - நாங்கள் கடவுளாகிய தந்தையிடம் படித்துக் கொண்டிருக்கிறோம். நோக்கம், குறிக்கோள் என்பது ஒவ்வொருவர் புத்தியிலும் உள்ளது இல்லையா? நாம் பாபாவிடமிருந்து எல்லையற்ற ஆஸ்தியைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். சொர்க்கத்தின் ஆஸ்தி என்பது லட்சுமி-நாராயணராக அல்லது இளவரசர்-இளவரசியாக ஆவது. இங்கே இந்தக் கல்லூரியில் நீங்கள் இளவரசர்-இளவரசி ஆகிறீர்கள். நீங்கள் அறிவீர்கள், வருங்காலத்தில் புதிய உலகத்தின் இளசரசர்-இளவரசி ஆவதற்காக நீங்கள் படித்துக் கொண்டிருக்கிறீர்கள். புதிய உலகம் சத்யுகம் எனப்படுகிறது. சத்யுகத்தில் அல்லது கலியுகத்தில் இருப்பவர்கள் கூட மனிதர்கள் தான் இல்லையா? ஞானமும் மனிதர்களுக்குக் கிடைக்கிறது. மிருகங்களுக்கு கொடுக்க மாட்டார்கள். மனிதர்கள் தெய்வீக குணங்கள் உள்ளவர்களாக இருந்தார்கள். இப்போது அசுரகுணங்கள் உள்ளவர்களாக ஆகியிருக்கிறார்கள். பிறகு நாம் தெய்வீக குணமுள்ளவர்களாக ஆகின்றோம். இது குழந்தைகளாகிய உங்களுடைய புத்தியில் உள்ளது. இதுவோ சுலபமாகப் புரிந்து கொள்ள வேண்டிய விஷயமாகும். 84 பிறவிகளின் சக்கரமும் பாரதவாசிகளுக்காகவே ஆகும். 84 பிறவிகளின் ரகசியம் வேறு யாருடைய புத்தியிலும் பதியாது. சுயதர்சன சக்கரமோ கிருஷ்ணருக்கு இருந்தது. விஷ்ணு என்பது லட்சுமி-நாராயணரின் இணைந்த வடிவமாகும். சிறிய வயதில் இராதை-கிருஷ்ணராக இருந்தனர். ஆனால் அதையும் கிருஷ்ணருக்கு மட்டுமே கொடுக்கின்றனர். இராதைக்கு ஒருபோதும் சக்கரத்தைக் காட்டுவதில்லை. லட்சுமிக்கும் இல்லை. நாராயணருக்குக் கொடுக்கின்றனர், அல்லது விஷ்ணுவுக்குக் கொடுக்கின்றனர். அதில் லட்சுமியும் வந்து விடுகின்றார். உண்மையில் சுயதர்சன சக்கரதாரி நீங்கள் தான்.

நீங்கள் அறிவீர்கள், நாம் இறை தந்தையிடமிருந்து மிக அற்புதமான படிப்பைப் படித்துக் கொண்டிருக்கிறோம். அவரே ஞானக் கடல், மனித சிருஷ்டியின் விதை வடிவம், சத்திய மானவர், சைதன்யமானவர். ஆத்மா தான் சத்தியமானது, சைதன்யமானது என்று சொல்லப் படுகிறது. சரீரத்தை சத்தியமானது, சைதன்ய மானது என்று சொல்ல முடியாது. குழந்தையின் சரீரம் 5 மாதங்கள் வரை

ஜடமாக இருந்த போதும் கர்ப்பத்தில் வளர்ச்சியடைந்து கொண்டே இருக்கின்றது. ஒவ்வொரு பொருளுமே வளர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. ஆனால் இந்த மனிதர்களின் ஆத்மா உயர்ந்ததாகும். மனிதர்களுக்கு மகிமையும் இருக்கிறது என்றால் மனிதர் களுக்கு நிந்தனையும் இருக்கிறது. செய்தித் தாளில் அச்சிடப்பட்டிருந்தது இங்கிலாந்தின் முதன் மந்திரி சர்ச்சுக்குப் போகும் போது பூனையையும் கொண்டு சென்றார். பாருங்கள், பூனைக்கும் கூட எவ்வளவு மதிப்பு உள்ளது! அங்கே நீங்கள் கூட அனுமதி இல்லாமல் செல்ல முடியாது. ஆனால் பூனைக்குப் அனுமதி கிடைத்து விடுகின்றது. நாயும் கூட பகவானை நினைவு செய்கின்றது என்று அநேக மனிதர்கள் சொல்கின்றார்கள். குரைக்கின்றது இல்லையா? அதுவும் கடவுள் என்று சொல்கின்றனர். எதையுமே அறிந்து கொள்ளவில்லை. ஆக, மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் என்ன வேறுபாடு? நீங்கள் இப்போது எவ்வளவு உயர்ந்தவர்களாக ஆகின்றீர் கள்! நடைமுறையில் உங்கள் பிரபாவம் எப்போது வெளிப்படுமோ அப்போது - சரி, பிரம்மா குமாரிகளிடம் செல்ல வேண்டும் என்று சொல்வார்கள். பிரம்மாகுமார் குமாரிகள் சிவனுடைய பேரன்-பேத்திகள் ஆவர். இதில் முதியவர்கள் அல்லது இளைஞர்களின் விஷயம் இல்லை. நாம் சிவபாபாவின் பேரக்குழந்தைகள், பிரம்மாவின் புத்திரர் மற்றும் பேரக்குழந்தைகள் ஆகிறோம். எவ்வளவு சுலபமான விஷயம்! இது பிராமணர்களின் குலம் இல்லையா? படைப்பவரோ தந்தை தான் அல்லவா? நீங்கள் அறிவீர்கள், நாம் சிவபாபாவின் குழந்தைகள், இந்த மரத்தின் முதல்-முதல் நிறுவனர்கள். இந்த பிரம்மா சங்கமயுகத்தில் வேர் பகுதியில் அமர்ந்துள்ளார் இல்லையா? நாம் உயர்ந்தவரிலும் உயர்ந்த சிவபாபாவின் பேரக்குழந்தைகள். அவரிடமிருந்து நாம் சொர்க்கத்தின் ஆஸ்தியைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். இதை ஒருபோதும் மறத்த லாகாது. தேகத்துடன் கூட என்னென்ன இருக்கிறதோ அனைத்தையும் மறந்து அசரீரி ஆகவேண்டும். இப்போது நீங்கள் திரும்பிச் செல்ல வேண்டும், தாத்தாவிடம், அதாவது இனிய வீட்டிற்குச் செல்ல வேண்டும். நாம் சிவபாபாவின் பேரன்-பேத்திகள். தந்தையும் கூட நிச்சயமாக வேண்டும். நாம் பிரம்மா குமார் குமாரிகள். சிவனுக்குப் பேரக்குழந்தைகள் நாம். தாத்தாவின் ஆஸ்தி கிடைக்கின்றது. உலகத்தின் இராஜ்யமே உண்மையான சுயராஜ்யம் எனப்படுகின்றது. முழு உலகிற்கும் நீங்கள் எஜமான் ஆகின்றீர்கள். யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை. அது (அத்வைத) ஒரே இராஜ்யம் எனப் படுகின்றது. அங்கே வேறு யாரும் இருக்க மாட்டார்கள். சர்வகுண சம்பன்ன, அஹிம்ஸா பரமோதர்மத்தினர் ஆகிவிடுகிறீர்கள். பாபா சொல்லியிருக்கிறார், ஹிம்சை இருவகை. ஒன்று வன்முறை, இன்னொரு ஹிம்சை காம விகாரமாகிய வாள் கொண்டு துன்புறுத்துவது. நாம் இரட்டை அஹிம்சாவாதிகள். சத்யுகத்தில் ஹிம்சையின் விஷயம் இருப்பதில்லை. சரீர சம்மந்தமானதும் (வன்முறை) இருக்காது, விகார சம்மந்தமானதும் இருக்காது. அஹிம்ஸா பரமோ தேவி-தேவதா தர்மம் என்கிறார்கள். அதற்கு நாம் தகுதியுள்ளவர்களாக ஆகின்றோம். பிராமணரிலிலிருந்து பிறகு தேவதை ஆகிறோம். நமக்கு மனிதர் என்ற பெயர் போய் விடுகிறது. நாம் மனிதரி-ருந்து தேவதை ஆகிவிடுகிறோம். எப்படி பாரிஸ்டர், இஞ்சினியர் ஆகிறார்கள், அதுபோல. எப்படி ஆனார்கள் என்பதும் அவர்களே அறிந்து கொள்ள முடியும். நீங்கள் அறிவீர்கள், இந்தப் படிப்பின் மூலம் தேவதை ஆகிறோம். மிகவும் சுலபம். பல்வேறு தர்மங்களின் இந்த மரத்தினுடைய முதல்-இடை-கடை பற்றிய ஞானம் உங்களுக்கு உள்ளது, இது வேறு யாருக்கும் இல்லை. நீங்கள் அறிவீர்கள், நம்முடைய தந்தை

பரந்தாமத்திலிருந்து வந்திருக்கிறார்--நமக்குப் படிப்பு சொல்லித் தருவதற்காக. பரந்தாமம் எவ்வளவு உயர்ந்தது! ஆகாய விமானமும் கூட அங்கே செல்ல முடியாது. பாபா இறக்கை எதுவும் இல்லாமல் எப்படி வந்து நமக்குப் படிப்பிக்கிறார்! அவ்வளவு குஷியில் இருக்க வேண்டும். நம்முடைய பாபா ஆசிரியராகவும் இருக்கிறார். அவர் இருப்பது பரந்தாமத் தில், அங்கிருந்து வந்து நமக்குக் கற்றுத் தருகின்றார். அவரோ மிக அதிகமாக சேவை செய்ய வேண்டியுள்ளது. பக்தர்களையும் கூடத் திருப்திப்படுத்த வேண்டியுள்ளது. பக்தர்கள் என்னை அறிய மாட்டார்கள். அவர்களுக்கு நான் இவ்வளவு சேவை செய்கிறேன். தீவிர பக்தி செய்பவர் களின் விருப்பங்களையும் பூர்த்தி செய்கின்றேன். அதையும் சாட்சாத்காரமாகக் குழந்தைகள் பார்த்திருக்கிறார்கள். கிருஷ்ணர் காட்சி தரவேண்டும் என்று தீவிர பக்தியில் அமர்ந்து விடுகின்றனர். கண்களிலிருந்து (தீவிர பக்தியினால்) கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகின்றது. இதுபோல் தீவிர பக்தி செய்யும் போது அவர்களுக்கு சாட்சாத்காரம் செய்விக்கிறேன். அது பக்தி மார்க்கம். இச்சமயம் அவர்களையும் கூடத் திருப்திப் படுத்துகின்றேன். உங்களுக்கோ முன்னால் அமர்ந்து சொல்கிறேன், படிப்பிக்கிறேன். பகவான் வாக்கு என்பது நிச்சயம் உள்ளது. இதில் எந்த சந்தேகமும் இல்லை. கீதையிலும் எழுதப்பட்டுள்ளது-ஹே குழந்தைகளே! உங்களை நரனிலிருந்து நாராயணனாக ஆக்குவதற்காக இராஜயோகம் கற்பித்துக் கொண்டி ருக்கிறேன். ஆனால் கிருஷ்ணரின் பெயரைப் போட்டு விட்டார்கள். கிருஷ்ணரின் ஆத்மாவோ இச்சமயம் கடைசிப் பிறவியில் உள்ளது. அந்த ஆத்மா அமர்ந்து படிக்கின்றது. கிருஷ்ண பகவான் வாக்கு அல்ல. குழந்தைகள் அறிவார்கள், நிச்சயமாக சூரியவம்சம், சந்திரவம்ச இராஜதானி ஸ்தாபனையாகிக் கொண்டிருக்கிறது. நாம் புருஷார்த்தம் (முயற்சி) செய்து அவசியம் ஆஸ்தியைப் பெறுவோம். பாபா எவ்வளவு இரக்க மனம் உள்ளவர்! வந்து குழந்தை களை மடியில் எடுத்துக் கொள்கின்றார். குழந்தைகள் சொல்கின்றனர், பாபா, நீங்கள் அதே பாபா தான், நாங்கள் உங்களுடைய அதே குழந்தைகள் தான் இப்போது நீங்கள் வந்திருக் கிறீர்கள், இராஜ்ய-பாக்கியத்தைத் தருவதற்காக. பாபா மீண்டும் உங்களுக்குக் கற்பித்துக் கொண்டிருக் கிறார். நாம் சிவனுடைய பேரன்-பேத்திகள். பிரஜாபிதா பிரம்மா என்ற பெயரும் அனைவரும் அறிந்ததாகும். இதை நீங்கள் அறிவீர்கள், சொர்க்கத்தைப் படைப்பவர் பரமபிதா பரமாத்மா தான். ஆஸ்தி அவரிடமிருந்து தான் கிடைக்கும். பிரம்மாவுக்கும் கூட அவரிடமிருந்தே கிடைத்தது. இந்தத் தந்தை பிராமணர் களாகிய உங்களிடம் பேசிக் கொண்டிருக்கிறார். எவ்வளவு நன்றாக சொல்லிப் புரிய வைக்கிறார்! பிறகு ஏன் மறந்து விடுகின்றீர்கள்? பாபாவின் வீட்டில் அமர்ந்திருக் கிறீர்கள். பாபாவே ஆசிரியராகிக் கற்றுத் தருகின்றார். நாம் இராஜயோகம் கற்றுக் கொண்டி ருக்கிறோம். நாம் சாந்திதாமத்திற்குச் செல்வோம், பிறகு சுகதாமத்திற்கு வருவோம். இக்கலியுக உலகம் வினாசமாகி விடும். கல்பத்திற்கு முன் போலவே நீங்கள் சாட்சியாக இருந்து பார்க்க வேண்டியுள்ளது. பார்த்துக் கொண்டே செல்லுங்கள்--எப்படி பரீட்சை பாஸ் பண்ணினோம், எப்படி வினாசமாயிற்று? பிறகு எங்கே வெற்றி, அங்கே பிறவி எப்படி உள்ளது? எப்படி மாளிகை முதலியன கட்டுவோம்? புத்தியில் உள்ளது - தங்கத்தின் துவாரகை ஏதோ கீழே போயிற்று, பிறகு மேலெழுந்து வரும் என்பதெல்லாம் இல்லை. இராவணனின் இலங்கையும் தங்கத்தால் ஆனதாக இருந்தது என்று சொல்கிறார்கள்: அப்படியெல்லாம் எதுவும் இல்லை. தங்கத்தாலான மாளிகையோ தேவதைகளுக்கு உள்ளன. இப்போதோ அது

இல்லை. இப்போதோ பாரதத்தின் படகே மூழ்கிப் போன நிலையிலுள்ளது. இப்போது குழந்தைகளாகிய நீங்கள் நரகமாகிய விஷக்கடலிலிருந்து மீட்டெடுக்கிறீர்கள். மற்றப்படி கப்பல் முதலியவற்றின் விஷயம் எதுவுமில்லை. கடலின் குழந்தைகளாகிய நீங்கள் எரிந்து இறந்து சாம்பலாகி விட்டிருந்தீர்கள். காம சிதையில் அமர்ந்து கறுப்பாகி விட்டிருந்தீர்கள். நீங்கள் அழகாக இருந்தீர்கள், பிறகு கருப்பாகி விட்டீர்கள். பாரதத்தின் தேவி-தேவதைகளாகிய நீங்கள் எவ்வளவு அழகாக இருந்தீர்கள்! நீங்கள் அனைவரும் சியாம்-சுந்தர்! நாம் யாருக்கு முன்பு அமர்ந்திருக்கிறோம் என்பதை குழந்தைகள் அறிவார்கள்.. இறைவனாகிய தந்தை அமர்ந்து இராஜயோகம் கற்பிக் கின்ற இதுபோன்ற சத்சங்கம் வேறு எதுவும் இருக்க முடியாது. நிராகார் தந்தை யாருடைய சரீரத்திலாவது வந்திருக்கிறார் இல்லையா? ஸ்ரீகிருஷ்ணரைப் போல் எப்படி வருவார்? ஆம், அவருடைய ஆத்மாவோ இங்கே தான் உள்ளது இல்லையா?

இப்போது உங்களது புத்தியின் பூட்டு திறந்து விட்டது. நாம் பாபாவின் மூலம் உலகிற்கு எஜமானர் ஆகிறோம்; என்பதை அறிவீர்கள். ஆஸ்தி பெற்றுக் கொள்கின்றோம். நீங்கள் தான் மம்மா பாபா எனச் சொல் கிறீர்கள் என்றால் நீங்கள் படிப்பில் பின்பற்ற வேண்டும். அதனால் தான் தந்தையைப் பின்பற்றுங்கள் எனச் சொல்லப்படுகின்றது. உண்மையான தந்தை வேண்டும் இல்லையா? செயற்கையானவர் அல்ல. காந்தியையும் பாபுஜி என்றார்கள், ஆனால் ஆஸ்தியோ எதுவும் கிடைக்கவில்லை. அது எல்லைக்குட்பட்ட பாபுஜியிடம் கிடைக்கின்ற எல்லைக்குட் பட்ட ஆஸ்தி. அவரை எல்லையற்றவர் எனச் சொல்ல மாட்டார்கள். இந்த எல்லையற்ற பாபுஜியோ பரந்தாமத்திலிருந்து வந்துள்ளார். உங்களை சொர்க்கத்திற்கு எஜமானர் ஆக்கு கின்றார். நீங்கள் இப்போது திரிகாலதரிசி ஆகியிருக்கிறீர்கள். நீங்கள் தான் வைகுண்டத்தின் எஜமானர் ஆகிறீர்கள். எல்லையற்ற தந்தையிடம் எவ்வளவு அன்பு இருக்க வேண்டும்! மற்ற சங்கத்தை விட்டு உங்கள் ஒருவருடைய சங்கத்தில் மட்டுமே இணைவேன். பாபாவிடம், இது உங்களது உறுதிமொழி - எவ்வளவு அன்போடு பாபா அமர்ந்து குழந்தைகளுக்கு சொல்லிப் புரியவைக்கிறார்! சிவபாபா எப்போது வந்தார் என்பது பற்றி மற்றவர்கள் என்ன தெரிந்திருப் பார்கள்? ரக்ஷாபந்தன் எப்போது நடைபெற்றது? தெய்வீக குண தாரணை எப்படிச் செய்தார்கள்? கீதை சாஸ்திரம் படிக்கின்றனர், கேட்கின்றனர், ஆனால் எதையும் புரிந்து கொள்ளவில்லை. உங்களுடைய படிப்பு வாய்மொழி மூலமானது. இதில் சாஸ்திரங்கள் முதலியவற்றின் விஷயம் இல்லை. பகவான் அமர்ந்து கற்றுத் தருகின்றார். சங்கம யுகத்தில் தான் கற்றுத் தந்தார். இப்போது நீங்கள் நேரிடையாகவே கேட்கிறீர்கள் என்றால் நஷா (போதை) அதிக மாகின்றது. பிறகு அந்த நஷா குறையக் கூடாது. மனிதர்கள் யாரும் இதை நமக்குக் கற்பிக்கவில்லை. ஞானக்கடலாகிய பரமாத்மா கற்பித்துக் கொண்டிருக்கிறார். பிரம்மா குமார் குமாரிகள் அனைவரும் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். கேட்டுப் பிறகு மற்றவர்களுக்குச் சொல்கின்றீர்கள். உங்களுடைய ஒப்பந்தம்--பாபாவிடம் கேட்டுப் பிறகு மற்றவர்களுக்கு நிச்சயமாகச் சொல்வோம் என்பதாகும். இல்லையென்றால் கேட்டது எதற்காக? இப்போது நீங்கள் எல்லையற்ற தந்தையின் குழந்தைகளாக ஆகியிருக்கிறீர்கள். தந்தை சொல்கிறார்--என்னையே நினைவு செய்யுங்கள். தேகத்துடன் கூட தேகத்தின் சம்மந்தங்கள் அனைத்தையும் விட்டு விடுங்கள். தந்தை சிவன், நீங்கள் சாலிகிராம்கள். தந்தை மற்றும் குழந்தைகள். தந்தை சொல்கிறார்--நான்

நிராகாரி, நீங்களும் நிராகாரியாக இருந்தீர்கள். பிறகு இங்கே உங்களது பாகத்தை நடிப்பதற்காக வந்திருக்கிறீர்கள். இப்போது மீண்டும் திரும்பிச் செல்ல வேண்டும். பாபா பிரம்மாண்டத்தின் எஜமானர்.. நீங்களும் கூட பிரம்மாண்டத்தின் எஜமானர்களாக இருந்தீர்கள். அதைத் தான் பரந்தாம், நிர்வாண்தாம், மூலவதனம் என்றெல்லாம் சொல்கின்றனர். இவை அனைத்தும் பெயர்கள். மூலவதன், சூட்சுமவதன், ஸ்தூலவதன் - இது நம் முன்பாக சக்கரமாகச் சுற்றிக் கொண்டே இருக்கின்றது. நல்லது.

இனிமையிலும் இனிமையான, வெகுகாலம் கழித்து, காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய், தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. படிப்பில் தாய்-தந்தையரைப் பின்பற்ற வேண்டும். உயர்ந்ததிலும் உயர்ந்த பரந்தாமத்திலிருந்து பகவான் நமக்குப் படிப்பு சொல்லித் தருவதற்காக வந்திருக்கிறார் என்பதில் குஷியாக இருக்க வேண்டும்.

2. இப்போது நாம் மீண்டும் நமது இனிய வீட்டிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும். அதனால் அசரீரி ஆவதற்கான பயிற்சி செய்ய வேண்டும். தேகத்துடன் கூடவே மற்ற அனைத்தையும் மறந்து விட வேண்டும்.

வரதானம் : சப்தங்களை கடந்த சிரேஷ்ட மனநிலையில் நிலைத்திருந்து அமைதியின் சக்தியை அனுபவம் செய்யக்கூடிய மாஸ்டர் விதை சொரூபமானவர் ஆகுக.

சப்தங்களிலிருந்து கடந்து இருப்பதற்கான சிரேஷ்ட மனநிலையை அடைய, அனைத்து மனிதர் களின் ஈர்ப்பிலிருந்து கடந்த விடுபட்ட மற்றும் அன்பான சக்திசாலியான மனநிலையில் இருப்ப தாகும். ஒரு நொடியாவது இந்த சிரேஷ்ட மனநிலையில் நிலைத்திருந்து விட்டால், அதற்கான தாக்கம் முழுநாளும் காரியங்கள் செய்துக் கொண்டே தனக்குள் விசேஷமாக அமைதியின் சக்தியை அனுபவம் செய்வீர்கள். இந்த மனநிலையை தான் கர்மாதீத் ஸ்திதி (மனநிலை), பாப்சமான் சம்பூரண மனநிலை என்று சொல்லப்படுகிறது. இது தான் மாஸ்டர் விதை சொரூபம், மாஸ்டர் சர்வசக்திவானின் மனநிலையாக இருக்கிறது, இந்த மனநிலை மூலம் ஒவ்வொரு செயலிலும் வெற்றியின் அனுபவம் செய்யப்படுகிறது.

சுலோகன்: யாருடைய ஒவ்வொரு வார்த்தைகளும் மகாவாக்கியமாக இருக்கிறதோ, அவர்கள் மகான் ஆத்மா.